Gospel Truth
காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 48 International Editor : MICHAEL. W. SMITH இதழ் - 48

## நியாயம் கேட்கப்பட்டது, இரக்கம் பதிலானது

விபச்சாரத்தில் கையும், மெய்யுமாய் பரிசேயர்களால் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ இயேசுவிடம் கொண்டுவரப்பட்டாள். அவளுக்கான நியாயத் தீர்ப்பு ஆக்கினையும் என்னவென்று அனைவரும் காத்துக் கொண்டிருந்தனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஆக்கினை என்பது நிச்சயம். ஆயினும் பிதாவின் குமாரனாகிய இயேசு அவளிடம் போய் இனி பாவம் செய்யாதே என்றார் (யோவான் 8 : 11).

கிறிஸ்துவுக்கு முன் சுமார் 760களில் நினிவே பாவத்தினால் நிறைந்து துன்மார்க்க ஜீவியத்தின் இருப்பிடமானது. தெய்வ பயமின்றி விபச்சாரம், மீறுதல்கள், மாம்சத்தின் இச்சை, பொய் இது போன்ற அக்கிரமங்களும் அதன் தலைநகரமான அசீரியாவில் மாந்திரீகங்களும் தலை விரித்தாடியது. ஆகவே தேவன் தம்முடைய தீர்க்கதரிசியான யோனாவை அனுப்பி தான் நகரத்தை அழிக்கப் போகிறதை அறிவிக்க சொன்னார். ஆகவே நினிவேயின் ராஜாவும் ஜனங்களும் தேவனுடைய இரக்கத்தைப் பெற வற்புறுத்தி சாம்பலில் உட்கார்ந்து உபவாசித்து ஜெபித்தார்கள். தேவன் நம்முடைய நியாயத்திற்கு நின்று மனம் மாறி நினிவேயை அழித்து போடாமல் காத்துக் கொண்டார். (யோனா 3)
லூக்கா 15 ஆம் அதிகாரத்தில் தன் தகப்பனுக்கு விரோதமாய் கலகம் செய்த கெட்ட குமாரன் உவமையை கூறினார். கெட்ட குமாரன் தன் தகப்பனுடைய ஆஸ்தியை அழித்துப் போட்டான்.

பாவ சேற்றில் உளன்று போனவனுக்கு புத்தி தெளிந்த போது தகப்பன் தன்னை தன் வேலைக்காரர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்வார் என்று திரும்பி வந்தான். ஆம் தகப்பன் அவனை மன்னித்து திரும்ப தன் மகனாக ஏற்றுக்கொண்டார். நாட்கள் செல்ல செல்ல இஸ்ரவேல் ஜனங்களும் தேவனை மறந்து தங்களுடைய பாவ வழியில் பயணிக்க தொடங்கினர். தேவனும் மன்னித்து அவர்களை மீட்டு விட்டார். ஆகிலும் உம்முடைய மிகுந்த இரக்கங்களின் படியே, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர்; நீர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன் (நெகேமியா 9 : 31).
இயேசு பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்ட சமயத்திலும் கூட இயேசுவின் சீஷரான பேதுரு அவரை நான் அறியேன் என்று மறுதலித்தார். மூன்று முறை மறுதலித்தார். மூன்றாவது முறை பேதுரு மறுதலித்த போது இயேசு திரும்பி பேதுருவைப் பார்த்தார். அவர் மனங்கசந்து அழுதார்.
இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த பின் பேதுருவுக்கு தாம் உயிர்த்தெழுந்த நற்செய்தியை தேவன் விளங்க செய்தார். ஏனெனில் இயேசு பேதுருவை மன்னித்தார். 50 நாட்களுக்குப் பின் பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்களுக்கு போதிக்க தொடங்கினார். தாவீது ராஜா பத்சேபாளுடன் பாவத்திற்கு உட்பட்டதால் அவள் கணவனை போரில் கொன்றான்.



**ஆகிலும் உம்முடைய மிகுந்த இரக்கங்களின் படியே, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர்; நீர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன். (நெகேமியா 9 : 31 )**


| தலையங்கம் | வேதபாடம் கிருபை | துணை கட்டுரை கிருபையில் ஐசுவரியமுள்ளவர் | கேள்வி பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை கிருபாசனத்தில் மீதிலிருந்து உன்னோடு பேசுவேன் |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

# வேதாகமம்,

## நமக்கு போதிப்பது என்ன..... ?



**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

தாவீதின் பாவம் வெளிப்பட்டபோது அவன் தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும் என்றார் (சங்கீதம் 51 : 1). தேவன் தாவீதின் பாவத்தை மன்னித்தார். பவுல் அப்போஸ்தலனாய் மாறும் முன் பரிசுத்தவான்களை கொலை செய்து, சிறைச் சாலையில் அடைத்தார் சவுல். தேவனுடைய பரிசுத்தவான்களை பாடுபடுத்தி துன்புறுத்துகிறவராய் இருந்தார். ஆயினும் இயேசுவை மேசியா என்று அறிந்தபின் தேவன் சவுலை மன்னித்து இரக்கம் செய்தார் .புறஜாதிகள் மேல் தேவனுடைய இரக்கம் இன்னும் அவர்கள் மனந்திரும்பும்படி அவர் காத்திருக்கிறார் .



இயேசுவின் முகத்தை இரக்கத்தின் மூலம் பிறருக்கு காண்பிப்போம். பிறர் ஒருவரை ஆக்கினை தீர்ப்பு செய்ய எண்ணினால் நாம் அவர்களுக்கு இரக்கத்தை காண்பிப்போம்

ஆபிரகாமின் சந்ததியார் மனம் திரும்புவார்கள் என்று தேவன் நீடிய பொறுமையாக இருக்கிறார். எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாக வில்லை என்றார் (ஆதியாகமம் 15 :16). இந்த வேதாகம உதாரணங்கள் எல்லாம் ஒரே கருத்தை வலியுறுத்துகிறது.தேவனுடைய இரக்கம் எப்படிப்பட்டது என்பதை இவைகளினின்று நாம் அறியலாம். நியாய தீர்ப்புக்கும் ஆக்கினைக்கும் இரக்கம் இன்று வரை தடையாக நிற்கிறது. தேவன் நீடிய பொறுமை உள்ளவராய் இருந்து தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறார் . இன்று வரை அவருடைய இரக்கத்தின் கரம் எல்லோர் மீதும் இருக்கிறது. பாவம் செய்து அடிமைப்பட்டு துன்மார்க்கமாய் வாழ்வோருக்கு விசுவாசத்தோடு தன் பாவத்தை மறைக்காமல் அறிக்கையிடுகிறவனுக்கு பாவமன்னிப்பும் இரக்கமும் மீட்பும் சமீபம்.தேவனுடைய இரக்கம் எல்லா ஜனங்களுடைய அனுதின வாழ்விலும் ஊடுருவி காத்திருக்கிறது. 2007 ஆம் வருடம் ஒரு மனிதன் காரில் தன் குடும்பத்தோடு பயணம் செய்தான். குடிகார ஓட்டுனரால் அந்த கார் விபத்துக்குள்ளானது. பின்பக்கம் இருக்கையில் அமர்ந்திருந்த இரு பிள்ளைகளும் இறந்து போனதை தகப்பனும் கணவனும் கண்டனர். வயிற்றில் குழந்தையோடு கணவனுக்கு பின் இருக்கையில் அமர்ந்திருந்த மனைவியும் இறந்து போனார். அவர் அந்த குடிகாரனை கண்டபோது விரக்தி அடைந்தார். தேவனோ அவனை மன்னித்து எல்லாவற்றையும் விட்டுவிடு. அதை எண்ணி கலங்காதே என்றார் . குடிகார அந்த இளைஞன் மீது தேவன் இரக்கம் காண்பித்து மன்னிக்க கிருபை செய்தார். பல ஆண்டுகளுக்கு முன் தேவ சபையின் ஊழியர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். கொலையாளி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் அந்த ஊழியரின் குடும்பமும் அவரை மன்னித்து நாம் செய்த பாவங்களுக்காக தண்டனை என்ன ? நாம் எப்படி தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறோம். உங்களுடைய செயல்களால் யாரேனும் காயப்பட்டு இருக்கிறார்களா தேவன் நம்மை மன்னித்தது போல பிறரையும் மன்னிப்போம். சிலர் நம் வாழ்க்கையில் மறக்க முடியாத காயங்களையும் வருத்தங்களையும் உண்டாக்கினாலும் கூட அவர்களையும் மன்னிக்க தேவன் நம்மை அறிவுறுத் துகிறார். நாமும் தேவனைப் போல நீடிய பொறுமை உள்ளவர்களாக இருப்போம். இயேசுவின் முகத்தை இரக்கத்தின் மூலம் பிறருக்கு காண்பிப்போம். பிறர் ஒருவரை ஆக்கினை தீர்ப்பு செய்ய எண்ணினால் நாம் அவர்களுக்கு இரக்கத்தை காண்பிப்போம். சிலரை உதாசினப்படுத்தினால் நாம் அவர்களை மீட்டெடுப்போம். இயேசு கிறிஸ்து பரலோக தகப்பன் நமக்கு இரங்குவது போல நாமும் அவர்களுக்கு இரங்குவோம்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்– நீதிமொழிகள் 3 : 3

இதை வாசிக்கிறவர்களே சாலமோனை போல நானும் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். கிருபையும் சத்தியமும் உங்களை விட்டு விலகாது இருப்பதாக. நமது உலகம் பாவ இருள் சூழ்ந்தது. தேவனுடைய சத்திய வார்த்தைகள் நம்மை பிரகாசிக்க செய்ய வேண்டும். சத்தியத்தின்படி நடவுங்கள் கிருபையிலே வளருங்கள். தேவனுடைய கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டோம். மற்றவர்கள் மீது நாம் காட்டும் இரக்கமும் இயேசு கிறிஸ்துவின் பேரில் அவர்கள் விசுவாசம் வைக்க ஏதுவாகும்.இந்த இதழின் தலைப்பு கிருபை. நான் மனதளவில் இந்த வேத சத்தியங்களை ஆராயும்போது தொடப்பட்டேன். கிருபையை குறித்த ஏராளமான வேத சத்தியங்கள் போதிக்கப்பட வேண்டியுள்ளது. சத்தியத்திற்கு செவி சாய்த்து கிருபை நம்மை விட்டு விலகாமல் நிற்க பிரயாசப்படுவோம். தேவ கிருபை இல்லாமல் ஒருவராலும் வாழ முடியாது. நாம் தேவனுடைய அன்பை பெற எவ்வளவேனும் தகுதி இல்லாத போதும், நம்மை அவருடைய அன்புக்கு பாத்திரவான்களாய் மாற்றினார். நாம் தேவனுடைய அழைப்புக்குள்ளாக வந்த பிறகும் கூட ஒவ்வொரு நாளும் அவருடைய கிருபை நம்மை தாங்குகிறது. ஜெயம் உள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. இருப்பினும் நம்மில் எத்தனை பேர் தேவனுடைய மன்னிப்பை பெற வாஞ்சிக்கிறோம். என்னுடைய குறைகள் தவறுகள் மத்தியிலும் அவருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் மாத்திரமே நான் நிலை நிற்கின்றேன். தேவனுக்குள் வாழும் வாழ்வில் ஒவ்வொரு நாளும் தேவ கிருபையை நான் சார்ந்து உள்ளேன்.

ஜனங்களின் மீது இருக்கும் தேவ கிருபைக்காக நான் ஒவ்வொரு நாளும் சவாலாக நடத்தப்படுவதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். மிஷன் பயணத்தை முடித்து திரும்புகையில் நான் முடித்துவிட்டேன். நான் மீண்டும் இந்த மாம்சீக இச்சை கொண்ட மனிதர்களை சந்திக்க விரும்பவில்லை என்பேன். ஆனால் தேவனோ லூக்கா 13 ஆம் அதிகாரத்தில் அத்திமர உவமை சொல்லப்பட்டுள்ளதை எனக்கு நினைப்பூட்டுவார். கர்த்தர் எதையும் செய்து முடித்துவிட்டு போதும் என்று நிறுத்தமாட்டார்.

மதரீதியிலான உலகில் பலவிதமான சத்தியங்களை போதிக்கும் ஐக்கியங்களும் சபைகளும் நம் மத்தியில் பெருகிவிட்டது. இது தவறு. பரிசுத்தமாய் தேவசத்தியமும் சரியாக போதிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத சமாரியருடைய கிராமத்தில், சீஷர்கள் வானத்திலிருந்து அக்கினியை இறக்கி இவர்களை அழிக்கலாமா என்று கேட்டபோது இயேசு பிரதியுத்தரமாக, நீங்கள் என்ன ஆவி உள்ளவர்கள் என்பதை அறியீர்களா? லூக்கா 9 : 55 என்று கேட்டார். பெயர் கிறிஸ்தவர்களிடையே பிறரை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிற பாவத்தையே நான் காண்கிறேன். சில கொள்கைகளைக் கொண்டு நியதிகளைக் கொண்டு நாம் பிறரை நியாயம் தீர்க்கிறோம். ஆனால் அங்கே அன்பு இல்லை. நியாயம் தீர்க்கிற ஜனங்களே தங்களில் முரண்பாடு உள்ளதை உணர்வதில்லை. நாம் இரக்கத்தோடு இருப்பது நமக்கும் ஆசீர்வாதம் பிறருக்கும் ஆசீர்வாதம். கிருபை என்பது கற்பனைகளை கடந்தது. நடைமுறை வாழ்வில் அன்பு மன்னிப்பு நீடிய பொறுமை இவைகளை கடைபிடிக்க வேண்டும். சத்தியத்தை விடாது நாம் கிருபையையும் நம்மை விட்டு விலகாமல் மற்றவர்களுக்கு இரக்கம் செய்ய பிரயாசப்படுவோம்.


ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக

ஆப் ஐ பதிவிறக்கம் செய்ய

வேதாகம கற்பனைகளை புரிந்து கொள்ள உதவும் வேதாகம வளங்கள் அடங்கியது

GET IT ON Google Play





# வேதபாட வழிகாட்டி

## பொருள் : கிருபை

**வேத வாசிப்பு :** ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன் – சங்கீதம் 86 : 15

**வரையறை :** கிருபையானது அன்பும், மன்னிப்பும் ஒரு சேர அமைந்த பண்பு. அன்பான உறவு. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மீது நாம் காட்டும் பரிவு ,நியாயம் தீர்க்கிறவர்களினின்று அவர்களை விடுதலையாக்கும்.

**செய்திச் சுருக்கம் :** தேவன் தன் நியாயத் தீர்ப்பை தாமதப்படுத்த காரணம் நம் மீது உள்ள கிருபையும், பாசமும். மனம் திரும்புதலுக்கு ஜனங்களுக்கு இன்னொரு வாய்ப்பையும், மீட்பையும் தர காத்திருக்கிறார். இந்த அடித்தளமான இயேசுவின் பண்பையும் கிருபையின் ஆவியையும் கொண்டு மற்றவர்களை நாம் நேசிக்ககடவோம்.

---

### I.தேவனுடைய தெய்வீக குணாதிசயம்

A. 2கொரி 1 :3-4 இரக்கங்களின் பிதா

B.தானி 9 : 9 ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு

C.உபா 4 : 29 - 31 தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவன்

D.மீகா 7 : 18 அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால்

E.மத்தேயு 9 : 36 அவர்கள் மேல் மனதுருகி

### II. தேவனுடைய கிருபை ஏராளமானது

A.சங்கீதம் 103 : 8 கர்த்தர் மிகுந்த கிருபை உள்ளவர்

B.சங்கீதம் 51 : 1 - 2 உமது கிருபையின் படி எனக்கு இரங்கும்

C.1 நாளாகமம் 16 : 34 அவர் கிருபை என்றும் உள்ளது

D.2 பேதுரு 3 : 9 நம்மில் நீதி பொறுமை உள்ளவராய் இருக்கிறார்.

### III. எல்லாரும் பாவம் செய்து ஆக்கினைக்கு உட்பட்டவர்களே

A. ரோமர் 3 : 23 எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி

B.ரோமர் 6 : 23 பாவத்தின் சம்பளம் மரணம்

### IV.கிருபையானது தேவ சித்தத்தில் ஆனது

A. எபேசியர் 2 : 4-6 கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்.

B.ரோமர் 9: 15 - 16 எவன் மேல் இரக்கமாயிருக்க சித்தமாய் இருப்பேனோ அவன் மேல் இரக்கமாய் இருப்பேன்

### V. இரட்சிப்பும் நித்திய ஜீவனும் கிருபையினால் உண்டானது

A. லூக்கா 1 :78 -79 உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்

B.தீத்து 3 : 4- 7 நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின் படியே

C.ஏசாயா 55 : 7 அவர் மன்னிப்பதற்கு தயவு செய்து இருக்கிறார்

D.1 பேதுரு 3 : 2 -4 தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார்.

### VI.தேவபிள்ளைகளை கிருபை சூழ்ந்துள்ளது

A. சங்கீதம் 94 : 18 கர்த்தாவே உமது கிருபை என்னை தாங்குகிறது

B.புலம்பல் 3 : 21 - 23 நாம் நிர்மூலம் ஆகாது இருக்கிறது கர்த்தருடைய கிருபையே

### VII.இரக்கமுள்ள பிரதான ஆசாரியர்

A. எபிரேயர் 2 : 16 -18 இரக்கமும் உண்மையும் உள்ள பிரதான ஆசாரியர்

B.எபிரேயர் 4 : 15 -16 நாம் இரக்கத்தை பெற கிருபையை அடைய தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரக் கடவோம்

### VIII. கிருபையின் முடிவு

A. யோவான் 12 : 48 கடைசி நாளில் நியாயம் தீர்க்கும்

B.மத்தேயு 25 : 45 -46 நித்திய ஆக்கினையை அடையவும்

C.எபி 10 : 28 -29 கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன்

### IX.கிருபையின் வாழ்வுக்கு அழைக்கப்படுகிறீர்கள்

A. லூக் 6 : 36 உங்கள் பிதா இரக்கம் உள்ளவராய் இருக்கிறது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்

B.மீகா 6 : 8 இரக்கத்தை சிநேகித்து

C.சகரியா 7 : 9 தயவும் இரக்கமும்

### X.பலியை பார்க்கிலும் இரக்கமே பெரியது

A. மத் 23 : 23 விசேஷமாக நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்.

B.ஓசியா 6 : 6 பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்.

C.மத் 9 : 11-13 பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்.

### XI.ஆசீர்வாதமும் நியாயத்தீர்ப்பும்.


A. மத்தேயு 5 : 7 இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்

B.யாக் 2 : 13 இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கம் இல்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்

C.மத்தேயு 18 : 33 -35 தப்பிதங்களை மன்னியுங்கள்

**முடிவு :**

ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட
பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும்,
தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும்,
நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர்
தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால்,
கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல,
ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் – கொலோ 3 : 12 -13



# இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்

ஆவிக்குரிய தவறுதல்களால் நிறைந்தவர்களை தண்டிக்கும்படி தேவனாகிய கர்த்தருடைய கரத்தில் நியாயத்தீர்ப்பின் செங்கோல் கொடுக்கப்பட்டிருக்கிறதை பலர் தேவனுடைய தெய்வீக பண்பாக எண்ணலாம். ஆனால் இது சத்தியத்தின் புரிந்து கொள்ளுதலுக்கு தூரமானது. தேவன் இரக்கம் உள்ளவர். மனிதன் பாவம் செய்யும்போது பாதிக்கப்படும்போது தேவையின் போது தோல்வியினால் துவண்டு போகும்போது கர்த்தருடைய இரக்கத்தின் கரம் நம் ஒவ்வொருவர் மேலும் நீட்டப்பட்டுள்ளது.

**தேவன் நீதியும் பரிசுத்தமும் உள்ளவர். ஆகையால் அவரிடத்தில் திரளான மன்னிப்பும் இரக்கங்களும் உண்டு.இரக்கம் என்பது நம் பிதாவாகிய தேவனின் தெய்வீக பண்பு.**

## தேவனுடைய தெய்வீக குணாதிசயம்

சங்கீதக்காரன் தாவீது எழுதுகையில் ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன் (சங்கீதம் 86 : 15). இரக்கம் என்பது அன்பும் மன்னிப்பும். மனவுருக்கமும் . நாம் ஆக்கினையை அடையாதபடிக்கு அவர் நம்மில் மன உருக்கமும் பூரண கிருபையும் வைத்தார் . தேவனுடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவர் இரக்கங்களின் பிதா (2 கொரிந்தியர் 1: 3). எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு.
(தானி 9: 9) . இரக்கம் என்பது நம் பிதாவாகிய தேவனின் தெய்வீக பண்பு. தேவன் ஜனங்களிடம் எவ்வாறு இரக்கம் பாராட்டினார் என்பதை பலவிதமான வேத சத்தியங்கள் மூலம் காணலாம். உன் தேவனாகிய கர்த்தர் இரக்கம் உள்ள தேவன் (உபாகமம் 4: 31). மீகா 7: 18ல் அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். இந்த பூமியில் இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாய் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்த போது பாவிகளை சிநேகித்தார். ஆகவேதான் அவர் திரளான ஜனங்களை கண்ட பொழுது அவர்கள் மேல் மனதுருகினார்
(மத்தேயு 9 : 36).

## தேவனுடைய இரக்கம் மிகுதியானது

தேவன் எப்பொழுதும் கடிந்து கொள்ளார் என்றைக்கும் கோபம் கொண்டிரார்
சங்கீதம் 103 : 8. நியாயத்தீர்ப்பிற்கு முன்பு தேவனுடைய இரக்கங்களை நாம் பெற வேண்டும். ஆகவேதான் தாவீதும் பத்சேபாளிடத்தில் பாவத்திற்கு உட்பட்ட பின்பு மனம் உடைந்து குற்ற மனசாட்சியோடு தேவனிடத்தில் மனந்திரும்பி ஒப்புரவாகினார். தேவனே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும் (சங்கீதம் 51 : 1). தாவீது நீதி கேட்டு தேவ சமூகத்தில் முறையிடவில்லை. மாறாக அவருடைய நம்பிக்கை தேவனுடைய இரக்கத்தின் பேரில் இருந்தது. அவருடைய இரக்கத்தினாலேயே இன்னும் அநேக ஜனங்கள் காக்கப்படும் படியாக தருணங்களை தேவன் தந்து கொண்டே இருக்கிறார். எல்லாரும் மனம் திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமை உள்ளவராய் இருக்கிறார் (2 பேதுரு 3 : 9).

## எல்லோரும் பாவம் செய்து தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாகின்றனர்

எல்லோரும் பாவம் செய்து (ரோமர் 3:23) தேவனுடைய கற்பனையை மீறி நடக்கிறார்கள். இந்த மீறுதலினிமித்தம் பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6 : 23). தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக (எபேசி 2 : 4 - 6). அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார். ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம் (ரோமர் 9 : 15 -16).

## இரட்சிப்பும், நித்தியஜீவனும் இரக்கத்தினால் உண்டானது

மனுக்குலத்தின் பாவத்தை மன்னிக்கும்படி நம் மீது அன்பு கொண்டதினாலேயே பிதாவாகிய தேவன் நம்முடைய ஒரே பேரான குமாரனாம் இயேசுவை உலகிற்கு அனுப்பினார். மீட்பு வந்தது. நாம் செய்த நீதியின் கிரியைகளினி மித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கி னாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குத லினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3 : 5). நம்முடைய சுயநீதி மற்றும் நற்கிரியைகளின் நிமித்தம் நாம் இரட்சிப்புக்கு பாத்திரவான்களாக எண்ணப்படவில்லை. கிறிஸ்துவின் ஈவாகிய இரட்சிப்பை பெற மனந்திரும்பி பாவத்தை அறிக்கையிட்டால் போதும். துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தை விட்டு திரும்பி
(ஏசாயா 55 : 7) தேவனுடைய அன்பையும் மன்னிப்பையும் மறந்து கடந்த காலங்களில் பாவம் செய்த ஒரு மனிதன் தன் பாவத்தை விட்டு விலகி, அவருடைய கிருபையினாலே இரட்சிப்படைகிறான்.

### கிருபையானது தேவ பிள்ளைகளை தாங்குகிறது

என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும் போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது என்று சங்கீதம் 94 : 18 ல் தாவீது எழுதுகிறார். தேவனை தேடுகிற ஜனங்களும் கூட சில வேளைகளில் தவறுகிறார்கள். அப்படி தவறும் போது தேவன் ஒருபோதும் அவர்களை தண்டிப்ப தில்லை. மாறாக அவர்களுக்கு அவர் உதவி செய்து புதுப்பிக்கிறார்.




நாம் நிர்மூலமாகா திருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. (புலம்பல் 3 : 21 – 23).

### இரக்கமுள்ள பிரதான ஆசாரியன்

அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற் கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும் படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது (எபிரேயர் 2 : 17) . மாம்சீகத்தின் தவறுதல்களை தேவன் அறிவார். ஆகவே போராடுகிற நமக்கு அவர் இரங்குகிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம் (எபிரேயர் 4 : 16).

**கிறிஸ்தவர்கள் இரக்கமுள்ள வர்களாக மட்டுமல்ல. அதை நேசித்து செயல்படுத்து கிறவர்களாக இருங்கள்.**

### தேவனுடைய கிருபையின் முடிவு

இந்த வாழ்வில் நியாயத்தீர்ப்பில் ஜனங்களைக் கொண்டு வந்து நிற்க வைப்பதற்கு முன் தேவன் கிருபையாக நமக்கு இரக்கம் செய்ய வல்லவராயிருக்கிறார். தேவனுடைய வார்த்தை களையும் இயேசுவையும் விசுவாசிக்காதவர்கள் மேல் தேவனுடைய நியாய தீர்ப்பு வரும் (யோவான் 12 : 48, மத்தேயு 25 : 45 –46) சொல்கிறது நித்திய ஆக்கினையை அடைவார்கள். தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப் பாருங்கள் (எபி 10 : 28,29). தேவனுடைய கிருபைக்காக அவருக்கு துதி செலுத்துவோம். தெய்வீக சமாதானத்தையும் விசுவாசத்தையும் விடுதலையையும் இயேசுவின் அன்பினாலும், மன்னிப்பினாலும் மனந்திரும்பி பெற்றுக் கொண்ட நாம் ஆக்கினையை அடையாமல், விடுதலையை பெற்றிருக்கிறோம். ஒரு மனிதனுடைய பின்புலம், அவனுடைய பாடுகள், இதையெல்லாம் தாண்டி தேவன் ஒருவர் மேலும் பட்சபாதம் இல்லாதவராய் எல்லோருக்கும் உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார்.

### இரக்கம் உள்ளவர்களாக அழைக்கப்படுகிறீர்கள்

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் (லூக்கா 6 : 36) . மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (மீகா 6 : 8). இருதயத்திலிருந்து மனப்பூர்வமாய் மற்றவர்களுக்கு இரங்கத் தீர்மானியுங்கள்.

### பலியைப் பார்க்கிலும் இரக்கமே சிறந்தது

மீதியுள்ள நியாயத்தீர்ப்பு வெளிப்படும். தேவப் பிள்ளைகளாகிய நாம் பாவத்தில் வாழும் மற்ற ஜனங்களுக்கு இயேசுவின் அன்பை இரக்கத்தின் மூலம் காண்பிக்க வேண்டும். பரிசேயர்களைப் போல போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறீர்கள். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது (மத்தேயு 23 :23). பலியை யல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன். தகன பலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன். (ஓசியா 6 : 6). பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களை யல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார் (மத்தேயு 9 : 11 –13). ஜனங்கள் பாவம் செய்து வழி விலகும் போது பரிசுத்தவான்களுடைய கடமை அவர்களுக்கு மன்னித்து இரங்கி விடுவிப்பதாகும். அனைவருக்கும் இன்று தேவனுடைய இரக்கம் வேண்டியதாய் இருக்கிறது.

### ஆசீர்வாதமும் நியாயத்தீர்ப்பும்

இயேசு கூறுகிறார் இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத்தேயு 5 : 7). இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும் (யாக்கோபு 2 : 13) .நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி,அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக் கொடுத்தான்.நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார். (மத்தேயு 18 : 33 –35). நமக்கு கர்த்தர் இரங்குகிறது போல நம்முடன் இருக்கும் மற்ற ஜனங்களுக்கும் நாம் இரங்குவோம்.

# கேள்வி ? பதில்!

**எப்படி நான் பிறர் மீது அனுதின வாழ்வில் இரக்கம் காட்டுவது?**

இரக்கத்தினை பாகுபாடு பார்க்காமல் எல்லோர் மீதும் காண்பிக்கும் போது சிலர் உங்களை தவறாக நடத்துவார்கள். சிலர் என்னை அடித்துவிட்டால் இயேசு கற்பித்தது போல நான் மற்றொரு கன்னத்தை காண்பிக்க வேண்டும். மாறாக நான் பழிவாங்க கூடாது. காயத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும். அங்கே தப்பிக்க வழி இருந்தால் தாராளமாக முயற்சிக்கலாம். இயேசுவை ஜனங்களின் ஒரு கூட்டத்தார் செங்குத்தான பாறையில் இருந்து தள்ள முயற்சித்தபோது இயேசு கூட்டத்தின் கண்களுக்கு மறைந்து அவ்விடம் விட்டுப் போனார் என்று பார்க்கிறோம். சிலர் உங்களை மாம்சீகமாகவோ பொருளாதார ரீதியாகவோ அல்லது வேறு எவ்விதத்திலாவது பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தால் வேதத்தின்படி நீங்கள் செவ்வனே நடக்க கற்றுக்கொள்ள வேண்டும். காயப்படுத்தின மனிதர்களை மன்னிப்பதும் இரக்கத்தின் ஒரு பண்பாகும். முழுவதுமாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து மன்னிக்க வேண்டும். அவர்கள் எத்தனை முறை நமக்கு விரோதமாக வந்தாலும் நாம் மன்னிக்க வேண்டும். அதற்காக கொலையாளி ஒருவரை அழைத்து வந்து வீட்டில் சாப்பாடு கொடுக்கவோ அல்லது திருடனை அழைத்து அன்போடு அவன் கையில் வீட்டு சாவியை கொடுக்க வேண்டும் என்று அர்த்தமில்லை.

தேவனுக்கு நாம் நல்ல உக்கிராணக்காரராக விளங்க வேண்டும். தேவனுடைய கற்பனைகளையும் உவமைகளையும் கருத்தில் கொண்டு நீதி நியாயங்களை கடைபிடிக்க வேண்டும். எல்லா சமயங்களிலும் அன்பின் ஆவியால் நிரப்பப்பட வேண்டும். உலகத்தில் நாம் அநியாயம் நடப்பதை காணும்போது சமரசப்படுத்திக் கொள்ள முயற்சிக்காமல் சமாதானத்தை நாட முயற்சிக்க வேண்டும்.

**மற்றவர்கள் மீது இரக்கம் செய்யவும் அதே சமயம் சத்தியத்தின் நிலையை சமரசம் செய்து எப்படி வெளிப்படுத்த முடியும்?**

என் ஆத்துமா என் கரத்தில் இருக்கிறது என்னால் மற்றவர்களை மாற்ற இயலாது. ஆனால் கர்த்தருடைய சத்தியத்தின்படி பரிசுத்த வாழ்க்கை வாழும் வல்லமையை தேவனுடைய கிருபையினால் பெற்றுள்ளேன். நம்மை சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காக சுயநீதியை சமரசம் செய்து கொள்ளக் கூடாது. நீதியின்படி வாழாத ஜனங்களுக்கும் சத்தியத்தின் படி நாம் இரக்கம் காண்பிக்க வேண்டும். தேவனுக்கேற்ற ஜீவியம் ஜீவிக்காத ஜனங்களை கூட நாம் நேசிக்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கான முக்கியமான ஒரு கற்றுக் கொள்ளுதல் உண்டு. அது சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுதல். நாம் மற்றவர்களை எந்த ஒரு குற்றமும் கண்டுபிடிக்காமல் நேசிக்க வேண்டும். சத்தியம் இல்லையேல் இரக்கமில்லை. சரியாக செயல்படுபவர்களுக்கு கிருபையும் இரக்கமும் தேவைப்படுவதை விட தவறுகிற மனிதர்களுக்கு அதிக இரக்கம் அவசியம்.

சங்கீதம் 85 : 10 சொல்லுகிறது கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும். கிறிஸ்துவின் மூலமாக சத்தியமும் கிருபையும் கல்வாரியில் நம்மை மீட்கும்படி சந்தித்தது. நம் வாழ்விலும் கிருபையும் சத்தியமும் சந்திக்க வேண்டும். நீங்கள் போதிக்கிறபடி கற்றுக் கொடுக்கிறபடி வாழும்படி கையாளுகிற சத்தியங்கள் பிறர் வாழ்வுக்கு வழிகாட்டியாக மாற வேண்டும்.

கிருபை சத்தியத்தின் அண்டையில் கொண்டு சேர்க்கிறது. சுயநீதியானது கொண்டு சேர்க்காது. சத்தியமும் கிருபையும் அல்லது நீதியும் கிருபையும் எல்லாம் வெளிப்படையானது. இயேசு கிறிஸ்து கற்பித்திருக்கிற நீதியின்படி கிருபையை நாம் புறக்கணிக்க கூடாது.

---



**கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்** – சங்கீதம் 25 : 10

வண்டியின் சக்கரங்கள் தடம் பதிக்கப்பட்ட பாதையில் எளிதாக அடையாளம் தெரியும். அதுபோல கிருபையும், சத்தியமும், கிறிஸ்துவுக்கு நேராய் கொண்டு செல்லும். கிறிஸ்தவர்களாகிய நாம் சத்தியத்தின் பாதையை மாத்திரம் பற்றிக்கொள்ளாமல் கிருபையையும் தொடர வேண்டும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

## நீங்கள் மற்றவர்களை நியாயம் தீர்க்கிறவர்கள் என்பதற்கான அடையாளங்கள்

1. நீங்கள் ஜனங்களை சந்திக்கும் போது அவர்களை மதிப்பிடுகிறீர்கள்.
2. உங்களை குறித்தல்ல, மற்றவர்களுடைய தவறுகள் மற்றும் பாவங்களை குறித்து அதிகம் கோபம் கொள்கிறீர்கள்.
3. ஜனங்களுடைய தவறுதல்களை நீங்கள் விரைந்து மன்னிப்பதில்லை.
4. மற்றவர்கள் உங்களோடு ஒத்துப் போக மறுக்கும் போது நீங்கள் உங்களை மற்றவர்களினின்று வேறுபடுத்திக் கொள்கிறீர்கள்.
5. ஆவிக்குரிய பலவீனங்களில் மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து எளிதாக குறை கூறிவிடுகிறீர்கள்.
6. மற்றவர்களுடைய தவறுகளோடு நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்கள்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## கிருபாசனத்தில் மீதிலிருந்து உன்னோடு பேசுவேன்

அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன் (யாத்திராகமம் 25 : 22).



இஸ்ரவேல் புத்திரர் வனாந்திரங்களில் அலைந்து திரிந்தபோது ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்தமான ஸ்தலத்தில் வைக்கப்பட வேண்டிய உடன்படிக்கை பெட்டியை தங்களோடு சுமந்து சென்றனர். பெட்டியின் மீது கிருபாசனம் வைக்கப்பட்டிருக்கும். பாவநிவிர்த்தி செய்ய வருடத்திற்கு ஒருமுறை பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் போது இந்த கிருபாசனத்தின் மீது இருந்து கர்த்தர் பேசுவார். நீதியின்படி தீர்ப்பு செய்யாமல் கிருபையினால் ஜனங்களுக்கு பாவ மன்னிப்பை அளித்தார்.

இஸ்ரவேல் புத்திரருடைய மீறுதல்கள் இரத்தம் தெளிக்கப்படும்போது கிருபையாய் தேவன் இறங்கி மன்னித்தார். காலை மற்றும் ஆட்டுக்கடாக்களின் ரத்தம் பாவ நிவாரண பலிக்கு போதாததினால் ஒரே தரம் இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற்காக தம் உயிரை பலியாக கொடுத்தார்.இந்த புதிய ஏற்பாட்டின்படி சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கர்த்தர் கிருபையினாலும் அன்பினாலும் நம்மை மன்னிக்கிறார். நியாயம் தீர்த்து ஆக்கினைத்தீர்ப்பை அளிப்பதை விட பாவத்தை மன்னித்து குணமாக்கி மீட்டெடுக்கிறார் .தேவனுடைய கிருபாசனத்தை நோக்க நாம் ஒருபோதும் பயப்பட வேண்டாம். ராஜாதி ராஜாவை நாம் எப்போது வேண்டுமானாலும் அழைக்கலாம்.
நம்மை ஆசீர்வதித்து தகுதிப்படுத்தி மேலான பாக்கியத்தை அருள் செய்திருக்கிறார். தேவப் பிள்ளைகளாகிய நம்மைச் சுற்றி குடும்பம், நண்பர்கள், உடன் ஊழியர்கள், கிறிஸ்தவ விசுவாசிகள் இன்னும் பலர் என உறவுகளும் நட்பும் நீடிக்கிறது .அவர்களோடு நாம் எப்படி பேசுகிறோம். கிருபையோடு இரங்குகிறோமா? அல்லது நீதியின் படி நியாயம் தீர்க்கிறோமா ? தேவனாகிய இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி அவருடைய தெய்வீக குணாதிசயத்தில் பங்கடைவோம். தேவனே நம்மோடு கிருபாசனத்தினின்று பேசும்போது நாம் மற்றவர்களை நீதியின்படி எப்படி தீர்ப்பு செய்ய முடியும்? ஆகவே எல்லோரோடும் கிருபையும் இரக்கமும் மிகுந்தவர்களாய் செயல்படுவோம். மீட்பின் வழியை தேர்ந்தெடுப்போம் ■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316